திரு. கி. இரா. சம்பந்தம் : அந்த விவசாயிகள் சாகுபடி செய்ய முடியாதபடி, வாழை போட முடியாதபடி, கரும்பை அங்கே சாகுபடி செய்ய முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அந்த பெட்டிஷனில் எழுதப்பட்டிருக்கிறது. அதுபற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

கனம் திரு. வெ. ராமையா : எனக்கு வந்திருக்கக்கூடிய முக்கியமான கேள்வி பட்டா வழங்குவது சம்பந்தமானது. அதைப் பரிசீலனை செய்து பார்த்து பதில் சொல்லியிருக்கிறேன். இதிலே யாரும் குறுக்கே நிற்க முடியாது. விவசாயிகள் பட்டாவுக்கு மனுக்கள் போட்டால், சட்டத்தின் அடிப்படையில் பட்டா வழங்குவதற்கு வேண்டிய என்கொயரி நடக்கும் என்று சொல்லியிருக்கிறேன். மற்றபடி தனியாகக் கேள்வி போட்டால், பார்த்துச் சொல்கிறேன்.

ஆலங்குடியில் அரிசி ஆலை

*** 187 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடியில் புதிதாகக் கட்டவிருக்கும் அரசாங்க மருத்துவமனைக் கட்டடத்திற்கு மிக அருகில் ரைஸ் மில் போடுவதைத் தடை செய்ய வேண்டுமென்று அண்மையில் பொதுமக்களிடமிருந்து மகஜர் ஒன்று வந்ததா?

(இ) ஆமெனில், அதற்குமேல் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The matter is under consideration in consultation with the District Revenue Officer, Tiruchirappalli.

திரு. பி. முருகையன் : அந்த மருத்துவமனைக்கு அருகாமையில் ரைஸ் மில் ஏற்பட்டால், அங்கிருக்கிற நோயாளிகளுக்கும், வேலை செய்கிறவர்களுக்கும் இடைஞ்சல் ஏற்படும் என்று மாவட்ட மருத்துவ அதிகாரியும், மற்ற மாவட்ட தலைமை அதிகாரிகளும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதை ஒட்டி அங்கே ரைஸ் மில் வைப்பதற்கு அனுமதி கொடுக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமையா : ஒரு குறிப்பிட்ட ரைஸ் மில்லுக்கு எங்கேனும் லைசென்ஸ் வழங்கவேண்டும் என்றால் அதுபற்றி பல அதிகாரிகள் பரிசீலனை செய்து சிபார்சு செய்யவேண்டும். அது நடந்துகொண்டிருக்கிறபொழுது இதுபோன்ற ஆட்சேபணை மனு வந்திருக்கிறது. இதையும் டி.ஆர்.ஓ. பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.